முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மணப்பாறை

அசல் வழக்கு எண். 1/2018

பிடபிள்யு - 3. சங்கீதா

2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 4 - ஆம் நாள் ஆகிய இன்று வாதி என்பவரின் சாட்சியாகிய PW3 ஆவது நபரின் வாக்குமூலம் (1969 .ம் ஆண்டு 54 .வது விதியின் 9—வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. A. ஆறுமுகம், உதவியாளர் அவர்களால் பிரமாணம் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் = சங்கீதா | வயது = |
| தகப்பனார் பெயர் = | சமயம் = |
| கிராமம் = | தொழில் = |
| தாலுக்கா = | ஜாதி = |

04.02.2019

சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை செய்யப்படுகிறது.

நான் இந்நீதிமன்றத்தில் இருந்து கிடைக்கபெற்ற சம்மனின் பெயரில் ஆஜராகின்றேன். நான் தொப்பம்பட்டி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றுகிறேன். நான் சம்மனில் குறிப்பிட்டுள்ள ஆவணங்களை கொண்டுவந்துள்ளேன். அந்த ஆவணங்களை நான் தாக்கல் செய்கிறேன் அது சா.சா.ஆ 1 ஆகும். தாவா இடத்தை பார்வையிட்டுள்ளேனா என்றால் பார்வையிட்டுள்ளேன். தொப்பம்பட்டி சர்வே எண் 41/7ஹெச்1 என்பது தற்போது ஆவணங்களின் படி அரசு புறம்போக்கு காலி நத்தமாக உள்ளது. அந்த இடத்தில் தற்போது யார் வசித்து வருகிறார்கள் என்றால் அதில் யாரும் தற்போது குடியிருக்கவில்லை. தாவா இடத்தில் வாதிகள் ஆஸ்பெஸ்டாஸ் போட்டு குடியிருந்து வருகிறார் என்றால் அங்கு ஒரு வீடு உள்ளது ஆனால் யாரும் வசிக்கவில்லை. வாதி தாசில்தாரிடம் தாவா சொத்து குறித்து கொடுத்த மனு எனது பரிசீலனைக்கு வந்ததா என்றால் அவ்வாறு மனு கொடுத்திருந்தார்கள் தாவா இடம் புறம்போக்கு என்பதால் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. அந்த மனு நிலுவையில் உள்ள போதே அவர்கள் இவ்வழக்கை தொடர்ந்ததால் அம்மனுவில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கவில்லை. தாவா இடம் வடக்கில் காலி அரசு புறம்போக்கு தெற்கு பஞ்சாயத்து தார் ரோடு

மேற்கு தங்கம்மாள் பழனிச்சாமி வீடு கிழக்கு தார் சாலை அரசு புறம்போக்கு காலி நத்தம் என்ற நான்கெல்லைக்குள் உள்ளதா என்றால் உள்ளது.

<u>குறுக்கு விசாரணை</u>

சர்வே எண் 41/7ஹெச்1 என்பது தான் சர்வே எண் 41/7ஹெச் ல் இருந்து உட்பிரிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். சர்வே எண் 41/7ஹெச்1 ன் மொத்த விஸ்தீரணம் 6694 ச.மீ அளவாகும். பொதுவாக ஒரு தனி நபருக்கு உள் ஒதுக்கீடு அடிப்படையில் 2-3/4 சென்ட் தான் கொடுப்பார்கள் என்றால் சரிதான். 6694 ச.மீ என்பது 1425 சென்ட் ஆகும். சர்வே எண் 41/7ஹெச்1 என்பது காலி நத்தமாக எவ்வித உட்பிரிவும் செய்யாமல் யாருக்கும் ஒதுக்கப்படாமல் உள்ளது என்றால் சரிதான். முதல் விசாரணையில் குறிப்பிடப்பட்டுள்ள நான்கெல்லை சர்வே எண் 41/7ஹெச்1 உடைய நான்கெல்லையா என்றால் இல்லை அதில் வீடு உள்ளதாக குறிப்பிடப்படும் வீட்டின் நான்கெல்லை ஆகும். எதன் அடிப்படையில் மேற்சொன்ன நான்கெல்லையை குறிப்பிட்டேன் என்றால் அதில் குறிப்பிட்டுள்ள நான்கெல்லை நான் சொல்லவில்லை. சர்வே எண் 41/7ஜி என்பது பெ.பழனிச்சாமி என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண் 41/7எப் என்பது சி.கண்ணம்மாள் என்பவர் பெயரில் உள்ளது. சர்வே எண் 41/7இ என்பது மு. ஆண்டிவேல் என்பவர் பெயரில் உள்ளது. நான் தாவா இடத்தில் வீடு இருந்ததாக சொல்வது எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால் எப்.எம்.பி-யை வைத்து சொல்லவில்லை நான் அந்த பக்கமாக சென்ற போது பார்த்தேன். பொதுவாக தாலுக்கா அலுவலகத்தில் மனு கொடுத்தால் அறிக்கை மட்டும் தான் கொடுப்போம் என்றால் சரிதான்.

<u>நீதிமன்ற கேள்வி</u>

தாவா இடத்தில் வீடு இருந்ததாக சொல்வது என்ன மாதிரியான வீடு என்றால் ஆஸ்பெஸ்டாஸ் போட்ட நான்கு புறமும் சுவர் எழுப்பிய வீடு ஆகும்.